# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 13768/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www. tneo.gov.in


## முன்னிலை: ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்

## மேல் முறையீட்டு மனு எண். 103 / 2015

திரு. N. குணசீலன்,
79–B, வடக்கு முல்லை தெரு,
ரகுமான் நகர்,
தஞ்சாவூர் . . . . .மேல்முறையீட்டாளர்

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
தஞ்சாவூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
எண்.1, வல்லம் ரோடு,
தஞ்சாவூர் – 613 007 . . . . . . எதிர்மனுதாரர்

## ஆணை நாள் : 18–3–2016

1. திரு. N. குணசீலன், ரகுமான் நகர், தஞ்சாவூர் அவர்கள் தஞ்சாவூர் மின்பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் 30.9.2015 நாளிட்ட ஆணையில் அதிருப்தியுற்றதால் 11.11.2015 நாளிட்ட மேல்முறையீட்டு மனுவை, மின்குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்ப்பித்துள்ளார். மேற்கண்ட மனுவில் முகாந்திர மற்றவகையில் சராசரி கணக்கீடு செய்து அவர் மீது திணிக்கப்பட்டிருக்கும் கூடுதல் தொகையை ரத்து செய்து தீர்ப்பு வழங்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

2. மேல்முறையீட்டாளர், மன்றத்தின் ஆணையில் அவர் செலுத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ள ரூ.6738/–ல் 25 சதவீத தொகையை முன்பணமாக உரிமம்தாரரிடம் செலுத்திய ரசீதின் நகலை சமர்ப்பிக்கும்படி 8.12.2015 நாளிட்ட மின்குறைதீர்ப்பாளரிடம் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது.

3. மேல்முறையீட்டாளர், அந்த 25 சதவீதத் தொகையான ரூ.1685/–ஐ உரிமம்தாரரிடம் 18.12.2015–ல் செலுத்தியமைக்கான ரசீதுடன் அவருடைய 18.12.2015 நாளிட்ட மேல்முறையீட்டு மனுவை அதற்கான படிவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

4 மேலும், அவர் வெளியூர் சென்றிருந்ததாலும் தொடர் மழை காரணமாகவும் உடனே மனுவை சமர்ப்பிக்க முடியவில்லை என்று அவருடைய 18.12.2015 நாளிட்ட மனுவில் தெரிவித்துள்ளார்.

5. மன்றத்தின் விதி 8–ன் படி மன்றத்தின் ஆணை பிறப்பிக்கப்பட்ட 30 நாட்களுக்கு பிறகு சமர்ப்பிக்கும் மேல் முறையீடுகளை தாமதத்திற்கான காரணம் ஏற்புடையதாக இருப்பின் மின்குறைதீர்ப்பாளர் ஏற்றுக் கொள்ளலாம் என்று உள்ளதால் மேல்முறையீட்டாளரின் தாமதம் மன்னிக்கப்பட்டு மனு மேல்முறையீட்டு மனு எண்.103/2015 ஆக பதிவு செய்யப்பட்டது.

6. மேற்கண்ட மேல்முறையீட்டின் நகல், மேற்பார்வை பொறியாளர், தஞ்சாவூர் மின்பகிர்மான வட்டம் அவர்களுக்கு இசைவிணக்கம் எதுவும் ஏற்படவில்லை எனில் பதிலுரையை சமர்ப்பிக்கும்படி 31.12.2015 நாளிட்ட அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்பட்டது.

7. மேற்பார்வை பொறியாளர், தஞ்சாவூர் மின்பகிர்மான வட்டம் அவர்கள் தன்னுடைய 14.3.2016 நாளிட்ட கடிதத்தில் மேல்முறையீட்டாளர், உதவி மின்பொறியாளர், இயக்குதலும் மற்றும் பராமரித்தலும் நீலகிரி பிரிவில் அவர் செலுத்தவேண்டிய கணக்கீடு சராசரி தொகை ரூ.8189/–ஐ ரசீது எண்.TRT401IAIS364 dt. 11.3.2016–படி செலுத்தியுள்ளார் என்றும், செலுத்திய தொகையில் கணக்கீடு செய்யப்பட்டு மீதமுள்ள தொகை திருப்பித் தரப்படும் என்ற தகவலும் நுகர்வோரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

8. மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 15.3.2016 அன்று கேட்புரை மின்குறைதீர்ப்பாளரால் நடத்தப்பட்டது.

9. எதிர்மனுதாரர் சார்பில் திரு. V. ரவிச்சந்திரன், உதவி செயற்பொறியாளர், இயக்குதலும் மற்றும் பராமரித்தலும் தஞ்சாவூர் அவர்கள் கேட்புரையில் கலந்து கொண்டார். மேல்முறையீட்டாளர் சார்பில் யாரும் கேட்புரையில் கலந்துகொள்ளவில்லை.

10. எதிர்மனுதாரர் சார்பில் கேட்புரையில் கலந்துகொண்ட உதவி செயற்பொறியாளர், தஞ்சாவூர் அவர்கள் மேல்முறையீட்டாளர் 25.2.2016 அன்று மேற்பார்வை பொறியாளர், தஞ்சாவூர் மின் பகிர்மான வட்டம் அவர்களின் அழைப்பிற்கிணங்க அலுவலகத்திற்கு நேரில் ஆஜரான பொழுது மேற்பார்வை பொறியாளர் அவர்களின் விளக்கத்தை ஏற்றுக்கொண்டு மேல்முறையீட்டு மனுவின் கோரிக்கைகளுக்கு சமரசம் செய்துகொள்ள இசைவு தெரிவித்தார் என்றும் தெரிவித்து மேல்முறையீட்டாளரின் 25.2.2016 நாளிட்ட மேற்பார்வை பொறியாளர்/தஞ்சாவூர் மின் பகிர்மான வட்டம் அவர்களுக்கு முகவரியிடப்பட்டு, மின்குறைதீர்ப்பாளருக்கு நகலிடப்பட்டுள்ள கடிதத்தையும் அளித்தார். மேலும், மேல்முறையீட்டாளர் சராசரி கணக்கீடு தொகையை 11–3–2016 அன்று செலுத்திவிட்டார் என்ற தகவலையும் தெரிவித்தார். மேலும், அவர் செலுத்திய தொகையில் மன்றத்தின் தீர்வுக்கு அதிகமாக செலுத்தப்பட்ட தொகை அவருக்கு திரும்ப வழங்கப்பட்டுவிடும் என்றும் தெரிவித்தார்.

11. தஞ்சாவூர் மின் பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், தன்னுடைய ஆணையில் மேல்முறையீட்டாளர் மின்மானி பழுதான காலங்களுக்கு செலுத்தவேண்டும் என்று தீர்வு செய்யப்பபட்ட நிலுவைத்தொகை ரூ.6738/– ஆகும். ஆனால், இந்த மேல்முறையீட்டாளர், உரிமம்தாரரிடம் செலுத்தியுள்ள தொகை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| (i) | மன்ற ஆணையில் 25 சதவீதத்தொகை, ரசீது எண். TRT401IA1S2483 dt. 18.12.2015ன் படி செலுத்தியது | ரூ.1685.00 |
| (ii) | ரசீது எண். TRT401IA1S364 dt. 11.3.2016ன் படி செலுத்தியது | ரூ.8189.00 |
| | ஆக மொத்தம் | ரூ.9874.00 |

| | | |
|---|---|---|
| | மன்ற ஆணைப்படி செலுத்தவேண்டிய தொகை | ரூ.6738.00 |
| | அதிகமாக செலுத்தப்பட்ட தொகை | ரூ.3136.00 |

12. மேற்கண்ட விபரங்களின்படி, மேல்முறையீட்டாளர், மன்றத்தின் ஆணையில் தெரிவிக்கப்பட்ட தொகைக்கும், அதிகமாக ரூ.3136/– செலுத்தியுள்ளதால் அந்த ரூ.3136/–ஐ மேல்முறையீட்டாளருக்கு திரும்ப வழங்கப்படவேண்டிய தொகை என்று தெரிகிறது. எனவே, மேல்முறையீட்டாளரிடம் அதிகமாக வசூலிக்கப்பட்ட தொகையை, இந்த உத்தரவு கிடைக்கப்பெற்ற 30 நாட்களுக்குள் திரும்ப வழங்க வேண்டும் என்று உத்தரவு இடப்படுகிறது.

13. மேல்முறையீட்டாளர் தன்னுடைய 15–3–2016 நாளிட்ட கடிதத்தில் அவரது மேல்முறையீட்டு மனு எண்.103/2015ஐ சமரசம் செய்து கொண்டதின் பேரில் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளதால் அந்த கடிதத்தின் சம்பந்தப்பட்ட பத்திகள் கடிதத்திலுள்ளவாறு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"எனது வீட்டின் மின்னிணைப்பு எண்.401–001–1277–க்கு பொருந்தாத கூடுதல் கட்டணம் செலுத்த மின்வாரியம் கோரியதற்கு குறைதீர்மன்ற முடிவின் பேரிலான மேல்முறையீட்டு மனுவின்படி பார்வையில் கண்ட கடிதத்தின் வாயிலாக 15.3.2016 அன்று நேரில் ஆஜராக அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதற்கிடையில் மேற்பார்வை பொறியாளர், தஞ்சாவூர் மின்பகிர்மான வட்டம் அவர்களின் அழைப்பிற்கு இணங்க 25.2.2016 அன்று நேரில் ஆஜரான பொழுது மேற்பார்வை பொறியாளர் தஞ்சாவூர் அவர்களின் வாதுரைகள் ஏற்புடையதாக இருந்ததால் இந்த மேல்முறையீட்டு மனுவின் கோரிக்கைகளை சமரசம் செய்து கொள்ள இசைவு தெரிவித்துவிட்டேன்.*

*அதன்படி மின்சார வாரியம் கோரியிருந்த தொகை 11.3.2016 அன்று மின்வாரிய அலுவலகத்தல் செலுத்தப்பட்டுள்ளது. ஆகவே எனது மேல்முறையீட்டு மனு எண்.103/2015 ஐ சமரசம் செய்து கொண்டதின் பேரில் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன். மேலும், இந்த மனு தொடர்பாக இனி மேல்முறையீடு செய்யமாட்டேன் என்பதையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். "*

14. மேற்கண்ட கடிதத்தில் மேல்முறையீட்டாளர் மேல்முறையீட்டு மனுவின் கோரிக்கைகளை சமரசம் செய்து கொள்ள இசைவு தெரிவித்துவிட்டேன் என்று தெரிவித்து அவர் செலுத்தவேண்டிய சராசரி கணக்கீட்டு தொகையையும் **11.3.2016** செலுத்தி மேல்முறையீட்டு மனுவை திரும்ப பெற்றுக்கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளதால் மேல்முறையீட்டு மனு எண்.103/2015 தள்ளுபடி செய்யப்படுகிறது என்று தீர்வு செய்யப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. N. குணசீலன்,
79–B, வடக்கு முல்லை நகர்,
ரகுமான் நகர்,
தஞ்சாவூர்

2) மேற்பார்வை பொறியாளர்,
தஞ்சாவூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
எண்.1, வல்லம் ரோடு, தஞ்சாவூர் – 613 007

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
தஞ்சாவூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
எண்.1, வல்லம் ரோடு, தஞ்சாவூர் – 613 007

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5) செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர், சென்னை – 600 008.

5) உதவி இயக்குநர் (கணிணி) – **இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர், சென்னை – 600 008.